Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

Tegajothi
TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். சார்வரி பங்குனி 2-ஆம் நாள் றம்ழான் 27. (15-3-61) புதன்கிழமை இதழ் 18

# சத்தியாக்கிரகம் பற்றி

## அரசாங்க அறிக்கை

### சமஷ்டி சத்தியாக்கிரகம் சரியானதல்லவாம்

கொழும்பு, மார்ச் 14

அரசாங்கத்தின் தற்காலிக தலைவர் திரு. சி. பி. டி' சில்வா இன்றிரவு ஜனப்பிரதிநிதிகள் சபையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் சத்தியாக்கிரகஇயக்கம்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்.

சமஷ்டிக்கட்சியினர் நடத்தும் சத்தியாக்கிரகம் சரியானதல்லவென்றும், இந்தியாவில் சுதந்திரப்போராட்டத்தின் போது நடந்த சத்தியாக்கிரகத்துக்கும் சமஷ்டிக்கட்சியினர் நடத்தும் சத்தியாக்கிரகத்துக்கும் வேறுபாடுண்டென்றும் திரு. சி. பி. டி' சில்வா கூறினர்.

### அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் வாய்ச்சண்டை

இன்று காலை நடைபெற்ற பார்லிமெண்ட் அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில், திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவுக்கும் செனெட்டர் எம். பி. டி. சொய்ஸாவுக்கும், வாய்ச்சண்டை ஏற்பட்டு கைச்சண்டையாகிவிடும் நிலைமைக்கு வந்தது நண்பர்கள் தலையிட்டு இருவரையும் விலக்கினர்.

யாழ்ப்பாணத்துக்குத் தாம் சென்று சத்தியாக்கிரகத்தைப்பற்றி நேரில்கண்டதை கம்பகா பிரதிநிதி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா அறிக்கை சமர்ப்பித்ததுபற்றி வாக்குவாதம் கிளம்பியது

"கூட்டத்தில் சத்தியாக்கிரகத்தைக்குறித்தோ, தமிழா பிரச்னையைப்பற்றியோ எவ்வித முடிவான தீர்மானமும் செய்யப்படவில்லை.

## தினசரி விசேஷ பூஜையும் பிரார்த்தனையும்

யாழ்ப்பாணம் புதன்

சத்தியாக்கிரக இயக்கம் வெற்றி பெற வேண்டுமென்று பிரார்த்திப்பதற்காக ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் காலையிலும் மாலையிலும் விசேஷபூஜை, பிரார்த்தனைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## "மொழிச் சட்டத்தில் ஒரு அட்சரமும் மாற்றப்படாது"

### தற்காலிக பிரதமருக்கு சிங்கள குமாஸ்தாக்கள் தாக்கீது

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க சிங்கள குமாஸ்தாக்களில் சுமார் 50 பேர், தற்காலிக பிரதமரான திரு. ஸி. பி. டி' சில்வாவைச் சந்தித்து, ஒருமனு கொடுத்தனர் அதில் 1958-ம் வருஷத்தில் செய்தது போல், சமஷ்டிக் கட்சியுடன் எவ்வித ஒப்பந்த

(6-ம் பக்கம் பார்க்க)

## உடப்புதமிழர் மறியலுடன் உண்ணுவிரதம்

### தீவட்டிகள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், புதன்

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கமும் திருமதி தர்மலிங்கமும் சுமார் 250 தொண்டர்கள் பின்னேவர தீவர்த்திகள் தாங்கிக் கொண்டு நேற்று முன்தினமிரவு கச்சேரிக்கு வந்து சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். நேற்று மாலை வரை தர்மலிங்கம் தம்பதிகள் தலைமையில் கச்சேரி வாசல்களில் நடைபெற்ற மறியல் இயக்கம் நேற்று மாலையிலிருந்து இன்று மாலைவரை அட்வக்கேட் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறுகிறது.

நேற்றைய மறியல் இயக்கத்தில் சிலாபப் பகுதியிலுள்ள உடப்பு என்னும் கிராமத்தைச் சேர்ந்த 36 தொண்டர்கள் கலந்து கொண்டனர். சென்ற பொதுத் தேர்தலில் சிலாபம் தொகுதியில் தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட திரு. பிரான்சிஸ் பெரேராவும் இவர்களுடன் சேர்ந்து மறியல் செய்தார். "தமிழன் எங்கிருந்தாலும் தமிழனே", "தமிழ் எங்கள் உயிர்" என்ற சுலோக அட்டைகளைத் தாங்கிக் கொண்டு மறியல் செய்த இத்தொண்டர்களுக்கு உடப்பு கிராமச் சங்கத் தலைவர் திரு. எம். ஆறுமுகசாமி தலைமை வகித்தார். உடப்புத் தொண்டர்கள் நேற்று முழு நாளும் உண்ணுவிரதமிருந்தனர். இவர்கள் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் கொண்ட பண முடிப்பொன்றையும் வழங்கினர்,

#### சலவைத் தொழிலாளர்

ஆனைக்கோட்டை, சுதுமலை சலவைத் தொழிலாளர் நேற்றுக் காலை ஊர்வலமாகக் கச்சேரிக்குச் சென்றனர். இவர்கள் மாட்டு வண்டிகளில் இளநீர் கொண்டு சென்றனர். பண முடிப்பொன்றையும் வழங்கினர்.

உடுவில் தொகுதியைச் சேர்ந்த குப்பிளானிலிருந்து ஊர்வலமொன்று நேற்று நண்பகல் கச்சேரியை வந்தடைந்தது. ஊர்வலத்தின் முன் 'ஒலிபெருக்கி' இணைக்கப்பட்ட மோட்டார் காரில் இரு சிறுவர்கள் தமிழ் எழுச்சிக் கீதங்கள் பாடிக் கொண்டு சென்றனர். ஊர்வலம் கச்சேரியை அடைந்த பின்னர் ஒலிபெருக்கி உபயோகிக்கப்பட்ட கார் சாரதியைப் பொலிசார் விசாரணை செய்தனர்.

#### 103 வயதுக் கிழவரும் மறியல்

நேற்றைய மறியல் இயக்கத்தில் கச்சேரியுடன் இணைந்துள்ள காரியாலய வாசலில் (பிஸ்கால் கந்தோருக்குள திர்ப்

(6 ம் பக்கம் பார்க்க)

## அனிச்சங்குளம் கலவர வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

வகுப்புக்கலவர காலத்தில் அனிச்சம் குளத்தில் சட்ட விரோதமாகக் கூடியதாகவும் வில்லியம் சிங்கோ என்பவரின் கடைக்குத் தீவைத்ததாகவும் குறாம்சாட்டி ஒன்பது பேர் மீது தொடரப்பட்ட வழக்கில் வடமாகாண அஸைஸ் நீதியரசர் திரு. என். சின்னத்தம்பி

(6-ம் பக்கம் பார்க்க)




தமிழ் உரிமைப்போரில் கலந்துகொள்வதற்கு யாழ்ப்பாண மாணவிகள் நகர மண்டபத்திலிருந்து கச்சேரிக்கு சென்ற சனிக்கிழமை காலை அணிவகுத்துச் சென்றனர். மாணவிகள் ஊர்வலத்துக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமை வகிக்கிருர்.

யாழ்ப்பாணத்தில்

## அரிசி பங்கீட்டில் அரசாங்கம் அசிரத்தை

### வேலை நிறுத்தம் செய்ய தொழிற் சங்கங்கள் யோசனை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் பங்கீட்டரிசியும் மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருள்களும் விநியோகிப்பதற்கு அரசாங்கம் ஒழுங்கு செய்யாதிருப்பதால் யாழ்ப்பாணப்பகுதிகளிலுள்ள தொழிற் சங்கங்கள் பலவேலை நிறுத்தத்தில் இறங்குவதுபற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கின்றன.

வட இலங்கை பஸ் தொழிலாளர் யூனியன், யாழ்ப்பாணப்பகுதி ரயில்வே சில்லறைச் சிப்பந்திகள், சுகாதார சேவைப் பகுதித் தொழிலாளர்கள், நகரசுத்தித் தொழிலாளர்கள், தபால்தந்தி ஊழியர்கள், வகுப்புத் தொழிலாளர்கள் ஆகியோர் பங்கீட்டரிசி வழங்கப்படாவிட்டால் நேரடி நடவடிக்கையிலிறங்குவதுபற்றி ஆலோசனை செய்வதாகவும் இன்று அவர்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவார்களென்றும் தெரிகிறது.

"அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்படாவிட்டால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலிறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்" என்று அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு ஆர். ஆர். தர்மரத்தினம் அரசாங்

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

தியானம் செய்யும் பொழுது உன்னிடம் உள்ள அமைதி பேசும்பொழுதும், நடமாடும் பொழுதும், செயல்புரியும்பொழுதும் இருக்கட்டும்.


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சாாவரி ஆண்டு பங்குனி மீ 2 உ (15-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## வேளாளர் கடமை

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பொதுமக்களுக்கு சென்ற மூன்று நாட்களாகப் பங்கீட்டு அரிசி வழங்கப்படவில்லை. பொதுமக்களுக்கு உணவு முதலிய அத்தியாவசிய தேவைகள் தடைப்படாமல் இருப்பதற்காகவே முப்படைகளையும் இவ்விரு மாகாணங்களுக்கும் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனல், அதே இராணுவம் உணவுப் பொருள்களுள்ள குதங்களைக் காவல்காக்கின்றனவேயன்றி, பொதுமக்களுக்கு அரிசியை விநியோகிக்க எவ்வித உதவியும் செய்யவில்லை. இது பெருந் தவறு மட்டுமல்ல, பாவமுமாகும். எப்படியும் அரசாங்கம் நீடித்து இப்படித் தன் முக்கிய கடமையை நிறைவேற்ருமல் இருக்க முடியாது.

அதற்கிடையே மக்கள் பட்டினியால் உயிர் துறக்காமல், அவர்களுக்கு உணவு வழங்கி காக்கவேண்டிய பெரும் பிரச்னை நம்மில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கின்றது. பசியால் வாடுபவருக்கு அன்னமளிப்பதே தமிழரின் உயர்ந்த பண்பு. நள்ளிரவில் பசி என்று வந்தவருக்கு கொட்டும் மழையிலே, வயலுக்குச் சென்று அங்கு விளைந்த நெல்லைத் திரட்டி வந்து, அரிசியாக்கி உணவிட்டவர் தமிழ் வேளாளரான இளையான் குடிமாற நாயனர். அவர் சிறப்பாக வேளாளர் செய்யவேண்டிய பெருங் கடமையைக் காட்டியுள்ளார்.

வேளாண்மை செய்வது மக்கள் பசியை ஆற்றுவதற்கேயன்றி, பணம் திரட்டுவதற்கல்ல. நல்ல வேளையாக இது அறுவடைகாலம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெல் அமோகமாக விளைந்திருக்கின்றது. விளைந்த நெல்லை விலை பெருமலோ குறைந்தவிலைக்கோ விற்று மக்களுக்கு உணவூட்ட வேண்டியது வேளாளரின் மேலான தர்மம். இதனைச் சிலர் செய்வதாயும் அறிகிறேம்.

இப்போதேற்பட்டுள்ள நெருக்கடி நிச்சயம் வெகுநாள் நீடித்திருக்க மாட்டாது. இச்சமயத்தில், வேளாளரும், உணவு உற்பத்திசெய்பவரும், இறைபருளால் விளைந்த தானியங்களை, மக்களின் பசியாற்றுவதற்குப் பயன்படுத்த அன்புடன் முன்வரவேண்டும். பணலாபத்தைக் கருதக்கூடிய சமயம் இதுவன்று. அரசாங்கம் செய்யத் தவறும் இந்த முக்கிய கடமையை, வேளாளரும் வர்த்தகரும் முன்வந்து செய்து சமூகத்துக்கு உணவூட்டி இச்சமயம் மக்களின் உயிரைக் காக்க வேண்டும்.

## முத்துச் சிப்பி விற்பனை

கொழும்பு, செவ்வாய்

முகத்து வாரத்தில் நடைபெற்றுவந்த முத்துச் சிப்பி ஏலவிற்பனை நேற்றுடன் நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக மூட்டை ஒன்று 30 ரூபாய் வீதம் விற்கப்படுகிறது.

# "சத்தியாக்கிரகிக்கு கோபமே வரப்படாது"

—மகாத்மா காந்தி

'சத்தியாக்கிரகம்' என்ற சொல்லின் பொருள், சத்தியத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல் என்பதே. இவ்வாறு சத்தியத்தை வலியுறுத்துதல் அதன் பக்தனுக்கு ஈடில்லாத வலிமையை அளிக்கிறது. இந்தச் சக்தியைத்தான், 'சத்தியாக்கிரம்' என்ற சொல்லால் அழைக்கிறேம். மனைவிக்கு எதிராகவோ, மன்னர்கள் சக பிரஜைகளுக்கு எதிராகவோ, ஏன், இந்த உலகம் முழுவதம்கும் எதிராகக்கூட உண்மையான சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளலாம்.

உலகமுழுவதற்கும் பொதுவான இச்சக்தி, உறவினர், அயலார், வாலிபர், வயதானவர், ஆண், பெண், நண்பர்கள், எதிரிகள் என்ற வேறுபாடு பாராட்டுவதில்லை. இவ்வாறு பிரயோகிக்கப்படும் சக்தியானது, தேக சக்தியாக இருக்க முடியாது. இதில் இம்சைக்கு இடமே இல்லை. எல்லோருக்கும் பொதுவானதாகப் பிரயோகிக்கப்படும் ஒரே சக்தி, அஹிம்ஸை அல்லது அன்புச் சக்திதான். வேறு வார்த்தைகளினல் கூறப்போனல், அது ஆத்மசக்தியாகும்.

அன்பானது பிறரை எதிர்ப்பதில்லை. தன்னைத்தானே எதிர்த்துக் கொள்ளுகிறது. ஆகையால் ஒருசத்தியாக்கிரகி அதாவது சட்டமறுப்பாளன் மரணத்தையும் சந்தோஷமாக ஏற்பான். எதிராளியின் மனதை மாற்ற எல்லா முயற்சியும் செய்வான். ஆனல் சொல்லிலோ, செயலிலோ, சிந்தனையிலோ எந்தத் தனிப்பட்டவருக்கும் கெடுதல் செய்ய எண்ணமாட்டான். சத்தியாக்கிரகி, கீழ்க்கண்ட சில விதிகளை அனுஷ்டிக்க வேண்டும்.

1. ஒரு சத்தியாக்கிரகிக்கு அதாவது சட்டமறுப்பாளனுக்குக் கோபமென்பதே வரப்படாது.

2. எதிராளியின்கோபத்தை அவன் ஏற்கவேண்டும்.

3. இவ்வாறு ஏற்கும்போது எதிராளியின் தாக்குதலை அவன் பெற்றுக்கொள்ள வேண்டும். திருப்பித்தாக்கக் கூடாது. ஆனல் தண்டனைக்காகவோ, மற்றெதற்குமோ பயந்து கோபத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு, அவன் பணிந்துவிடக்கூடாது.

4. அதிகாரத்திலுள்ள யாரும் ஒரு சட்ட மறுப்பாளனைக் கைது செய்யவிரும்பினல் அவன் தானகவே கைதாக முன்வரவேண்டும். அதிகாரிகள் தனது சொத்தைப் பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்தால் அதை எதிர்க்கப்படாது.

5. அவன் பதிலுக்குப்பதில் எதுவும் செய்யப்படாது. இதில் சபிப்பதும், வசையும் அடங்கும்.

6. ஒரு சட்டமறுப்பாளன், ஒருகாலும் தனது எதிரியைத் துன்புறுத்தக்கூடாது. அஹிம்ஸைத் தத்துவத்துக்கு முரணை பல புது கோஷங்களிலும் அவன் பங்கு கொள்ளக் கூடாது.

7. இந்தப் போராட்டத்தின் போது, யாராவது ஒருவர் ஓர் அதிகாரியைக் கேவலம் செய்வதாக இருந்தாலும், அல்லது தாக்குவதாக இருந்தாலும் ஒரு சட்டமறுப்பாளன் உயிரைக்கொடுத்தாலும் இந்த அதிகாரியைப் பாதுகாக்க வேண்டும்.

8. வகுப்புவாதச் சண்டைகளுக்கு இடமளிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தன்னல் முடிந்தவரை அவன் தவிர்க்க வேண்டும்.

9. சத்தியாக்கிரகிகளின் ஊர்வலம் நடைபெறுவதாக இருந்தால், எந்தவகுப்பினரின் உணர்ச்சிகளையும் புண்படுத்துமாறு அவர்கள் நடந்துகொள்ளமாட்டார்கள். இவ்வாறு புண்படுத்தும் மற்ற ஊர்வலங்களிலும் அவர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள்.

### ஆசிரியருக்குக்கடிதம்

# சத்தியாக்கிரகமும் தமிழ் பேசும் மக்களும்

கிழக்கு மாகாணத்திலும், வடமாகாணத்திலும் சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் நடைபெறுவது போற்றுதற்குரியது. ஆயினும் இன்னும் முழு ஆத்மீக பலத்தை செலவழித்துப் போராட இடமிருக்கிறது.

சிலர் இதைக் களியாட்டு விழாவாகப் பார்க்கிறர்களாம். வீண் வேடிக்கை பார்ப்பதற்காகவும் பொழுது போக்குவதற்காகவும் போவது அழகல்ல. மனத் தூய்மையுடனும் மன ஒருமைப்பாட்டுடனும் செய்யப்படும் தனிப்பட்ட வழிபாடும் கூட்டு வழிபாடுமே வெற்றியைத் தரும். பெண்கள் சிலர் விரதமிருந்து வழிபாடு செய்கிறர்களென்பது மகிழ்ச்சிக்குரியதே.

கூட்டு வழிபாட்டினல் பரிசுத்தமான சூழலை உண்டாக்கலாம். தெய்வத் தன்மை வாய்ந்த தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளைத் தினமும் ஓதுவதினல் ஒரு தெய்வ சக்தி பிறக்கின்றது. அதே சக்தி வெற்றியை ஈட்டும். பக்திப் பாடல்களின் ஓசையின் அலைகள், வட்டமிட்டுச் சென்று சிங்களச் சகோதரர்களினதும் சிங்கள மந்திரிகளினதும் காதுகளை அணுகி அவர்களுடைய உள்ளங்களை நெகிழச் செய்து மனதை மாற்றம் செய்யும் சக்தி வாய்ந்தது.

சத்தியாக்கிரகத்தில் பங்குபற்ற வசதியில்லாதவர்கள் தத்தம் விட்டிலிருந்தும் திருக்கோயில்களில் கூடி வழிபாடு செய்தும் திருமுறைகளைப் பக்தி சிரத்தையோடு ஓதியும் தொண்டு புரியலாம். வீட்டிலிருந்தே ஆன்ம பலமுள்ளவர்கள் சில மணி நேரத்தை ஒதுக்கித் தமிழ் மொழியின் உரிய இடத்தைப் பெறுவதற்கு வழிபாடு செய்யலாம்.

பிராமணர்களுக்கும் இந்நேரத்தில் ஒரு முக்கிய பங்கு உண்டு. திருக்கோயில்களில் தினமும் தமிழ் மொழிப் பாதுகாப்புக்காக அன்போடு அர்ச்சனை செய்ய வேண்டும். எல்லா உள்ளங்களிலும் நீக்கமற நிறைகின்ற எல்லாம் வல்ல இறைவன் சிங்களச் சகோதரர்களினதும் விசேடமாக மந்திரிமார்களதும் மனதை மாற்றுவார். இந்நேரத்தில் எமக்கு வேண்டியது மன ஒருமைப்பாடு, மனத் தூய்மை, இன ஒற்றுமை, நேர்மை, நிதானம், கடவுள் வழிபாடு. பல முறைகளில் அடைக்கலம் புகுந்த தேவர்களைச் சிவபெருமான் காப்பாற்றினர். **சத்தியாக்கிரகத்தை நீடித்து வளர விடாமல் கூடிய விரைவில் வெற்றி காண சர்வ மதக் கோயில்களில் ஒரு நாளைக் குறித்து விசேட பூசையும் வழிபாடும் செய்ய வேண்டும்.**

ஒரு தமிழன்
ஏழாலை மேற்கு,
சுன்னகம்.

II

இப்பொழுது இரண்டொரு நாட்களாக நடைபெறும் ஊர்வலங்களையும் கோஷங்களையும் பார்க்கும்போது வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்து போகுமோ என்று தோன்றுகிறது. சாத்வீகமாக ஆரம்பித்த போராட்டம், கோஷங்கள், ஊர்வலங்களாகி, வேடிக்கை விளையாட்டுக்களாகித் திருவிழாக் கோலம் கொள்ளுகிறது. சத்தியாக்கிரகம் என்ற தவத்துக்கு இத்தனை ஆடம்பரங்களும் வேடிக்கைகளும் அவசியம்தானு? மேளதாளம் தீவர்த்தி ஊர்வலம் என்று வளர்ந்துகொண்டே போனல் இயக்கத்தின் தூய்மை கெட்டுவிடவும் கூடும்.

கிராமம் கிராமமாக மக்கள் வந்து அமைதியாக அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவதற்கும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்? ஊர்வலங்கள் தவருமல் வரவேண்டியது நியாயம்; அது நமது சாத்வீக இயக்கத்துக்கு உள்ள மதிப்பை உயர்த்தும். ஆனல் அது நிசப்தமான ஊர்வலங்களாயிருந்தாலன்றே சாத்விகம்! உடலால் மட்டுமன்றி உள்ளத்தாலும் மாற்றனைப் புண்படுத்தாததுதான் சத்தியாக்கிரகம் என்று மகாத்மா சொன்னதாக ஞாபகமிருக்கிறது.

ஒரு சிறிய அசம்பாவிதம் கூட நமது அருமந்த சத்தியாக்கிரகத்தைப் பாழ்படுத்திவிடும். மன அடக்கம் கைவரப்பெற்றவர்களே இவ்வித சாத்வீக முறைகளில் ஈடுபட வேண்டும். அப்படிச் சிறந்த சிலரைப் பொறுக்கித்தான் மகாத்மா அந்தப் பெரிய சாம்ராச்சியத்தை எதிர்த்தார். நாமும் முதலில் ஓரளவு அப்படித்தான் ஆரம்பித்தோம். தலைவர்கள் அடிபட்டபோதும் சிரித்தபடியே மௌனமாகச் சகித்து நின்றர்கள். பார்த்தவர்கள் கண்ணீர் விட்டார்கள். அப்படியான புனிதத்தன்மையுடன் ஆரம்பித்த சாத்விக இயக்கத்தை மாசுபடுத்தும் வகையில் கோஷமிட்டுச் செல்லும் ஊர்வலங்கள் பெருகுவதைக் கண்டு அஞ்சுகிறேன்.

விஷயமறிந்தவர்கள் கூட உணர்ச்சி வெள்ளத்தில் அள்ளுப்பட்டுச் செய்வகையறியாது இப்படியானவற்றில் ஈடுபட்டுவிடுகிறர்கள். மன அடக்கத்தோடு சாத்வீக சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் பணிவுடன் வேண்டுகிறேன்.

ஈழத்துறைவன்
[illegible]ப்பாணம்

# ஐயாறன் எழுதுவது

கண்டியிலிருந்து ஒருதமிழர் சத்தியாக்கிரகத்தைத் தரிசிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் இந்தியாவில் நடந்த சத்தியாக்கிரகத்தையும் பார்த்துள்ளாராம். ஆனல் இங்கு தாம் கண்டதைப் போல், சத்தியாக்கிரகம் அவ்வளவு பக்திமயமாக, அமைதியாக, இந்தியாவிலும் நடந்ததில்லை என்று, உணர்ச்சிவசப்பட்டுப் பாராட்டினர்.

அரசாங்க அதிபர்களும், சிங்களத் தலைவர்களுமே பாராட்டுகையில், கண்டித் தமிழர் பாராடுவதில் வியப்பெதுவுமில்லையல்லவா?

* * *

நேற்றுக்காலை அன்பர் ஒருவர் வந்தார். "அறப்போர்" என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தில், "மகாத்மாகாந்தி இன்று இருந்தால் ஓடோடியும் இந்த ஈழத்திருநாட்டுக்கு வந்து, நம் அறப்போரைக்கண்டு களித்து வாழ்த்தாரா? அகிலத்தை அஹிம்சையால்காத்தவர் புத்த பகவான். அவர் இன்று இருந்தால் நாம் செய்யும் சத்தியாக்கிரகத்தைக்கண்டு, நம்மை ஆசீர்வதியாரா? என்னுடைய அஹிம்சா போதனைகளை இந்தத் தமிழரல்லவா அட்சரம் பிசகாமல் காத்து வருகிறர் என்று ஆனந்தக்கண்ணீர் சொரியாரா? பகைவனையும் இரட்சிக்கும்படி இறைவனிடம் மன்றடி, பூவுலகினுக்கு அன்பைப்போதித்த இயேசுபிரான். அவர் இன்று இருந்தால், நம்மிடையே வந்து நமது அறப்போரில் மீண்டும் மீண்டும் தைரியமூட்டி நமக்காகப் பிரார்த்திக்க மாட்டாரா? உலகில் உயிரனைத்துக்கும் இரங்குவதே தெய்வப்பணி என்ற நபிகள்நாயகம், நாம் செய்யும் அறப்போரைக்கண்டால் ஆனந்தம் கொள்ளாரா?......" என்றெல்லாம் உணர்ச்சி ததும்ப எழுதியுள்ளார்.

அவர் நேரில்வந்து, சத்தியாக்கிரகம் மிக மேலான முறையில் நடந்தாலும், ஊர்வலங்களில் சிலர் கூடாத கோஷங்களை ஆவேசத்துடன் கிளப்புவதாயும், ஏதாவது ஒரு தவறு நடந்துவிட்டால், அது இந்தப் புனித இயக்கத்துக்கே இழுக்காகிவிடலாமென்றும் கவலையுடன் கூறினர்.

தலைவர் எஸ். ஜே. வி. யும், ஊர்வலங்களில் "ஒழிக" போன்ற கோஷங்களே கூடாதென்று கண்டிப்பாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று மாதர்கள் ஊர்வலம் ஒன்று கண்டேன். முருகநாம பஜனை செய்துகொண்டு பக்தியுடன் அமைதியாக வந்தார்கள். மற்ற ஆண்களுக்கெல்லாம் இது ஓர் எடுத்துக் காட்டு போலிருந்தது.

* * *

கொழும்பு வானெலியில் இரண்டு நாட்களாக, சினிமாப் பாட்டுக்களோ, எவ்வித குரலிசையோ அடியோடு இல்லை என்றும், எல்லாம் வாத்திய இசையாகவே இருப்பதாயும் சில அன்பர்கள் என்னிடம் புகார் தெரிவித்தனர்.

சில பாட்டுகள் தமிழ்மொழியைப் போற்றுவதாக இருப்பதாயும், சத்தியாக்கிரகம் நடக்கும் இச்சமயத்தில், அவ்வித பாட்டுக்களைப் போட்டால், இயக்கத்துக்கு ஆக்கம் கொடுக்குமென்று நினைத்து, அடியோடு குரல்இசை எதுவுமே வேண்டாமென்று மேலதிகாரிகள் நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது.

முன் ஒருசமயமும், "தமிழ்" என்ற சொல்கூட, அஞ்சல் செய்யும் கூட்டுப்பிரார்த்தனைப் பாடலிலும் வரக்கூடாதென்று அவ்வளவு கண்டிப்பு செய்திருந்ததை நானறிவேன். ஆகவே இந்தத் தடை உத்தரவைப் பற்றி நான் வியப்படையவில்லை. என்றாலும் இவ்வ[illegible]ரவு ஒருவிதத்தில் பொருத்தமானதே.

தமிழரெல்லாம் துக்கம் கொண்டாடும் சமயமிது. துக்கசமயத்தில், 'டப்பா' சங்கீத குரலிசைக்குப் பதில் வாத்திய இசையையே அஞ்சல் செய்வது வானெலியின் வழக்கம். அதுபோல், இந்தத் துக்க வேளையில், இலங்கை வானெலியும் இவ்வித உத்தரவு போட்டுள்ளதென்று நாம் ஒருவித ஆறுதல் கொள்ளலாமல்லவா?

நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே! எல்லாம் [illegible]வன் [illegible]

# ஐ. நா. வசமுள்ள பகுதியைநோக்கி 1000

## காங்கோ துருப்புகள் படையெடுப்பு

### லியப்போல்ட்விலி விமான தளத்தில் மோதல் ஆபத்து

லியப்போல்ட்விலி, மார்ச் 14

"லியப்போல்ட்விலி விமானத்தளத்தைத் தங்களிடம் ஒப்படைக்காவிடில் எந்த வகையிலும் அதைக் கைப்பற்றுவோம்" என லியப்போல்ட்விலி அரசாங்கம் ஐ. நா. வுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. இதே சமயம் லியப்போல்ட்விலியை நோக்கி 1000க்கு மேலான கொங்கோ துருப்புகள் சென்றுகொண்டிருப்பதையும் ஐ. நா. வட்டாரங்கள் கூறின.

**ஐரோப்பியர் தாக்கப்பட்டனர்**

லுமும்பாவின் ஆதரவான கிவு மாகாணத்தில் 10 ஐரோப்பியர்கள் மிருகத்தனமாய்த் தாக்கப்பட்டதாயும், படுகாயமடைந்த அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாயும் ஐ. நா. அதிகாரி ஒருவர் கூறினர். அவர்களில் 3 பேர் பெல்ஜியர். நால்வர் போர்த்துக்கீசியர் மேலும், கிவுமாகாணத்திலுள்ள 300 ஐரோப்பியர்கள் அங்கிருந்து வெளியேற முடியாதபடி தடை செய்யப்பட்டிருக்கின்றனராம்.

### புதுடில்லியில் ஜனத்தொகை

**இருபத்தாறரை லட்சம்**

புதுடில்லி, மார்ச் 14

புதுடில்லியின் ஜனத்தொகை சுமார் 26,40,000 ஆகப் பெருகியிருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகிறன. 100 ஆண்களுக்கு 79 பெண்கள் வீதம் புதுடில்லியில் இருக்கிறார்கள்.

ராஜஸ்தானின் ஜனத்தொகை 2,14,60,000.

மைசூர் ராஜ்யத்தின் ஜனத்தொகை 2,35,47,000 பங்களூர் நகரின் ஜனத்தொகை 12,08,000 மைசூர் நகரத்தின் ஜனத்தொகை 2,53,500.

பீகார் ராஜ்யத்தின் ஜனத்தொகை 4,64,57 000 ஆகும். பாட்னா நகரில் 3,64,000 பேரும் ஜாம்ஷெட் பூரில் 3,32,000 பேரும் வசிக்கின்றனர்.

### பிரதமரின் 'ஆக்ஸ்போர்ட்' விஜயம்

லண்டன், மார்ச் 13

இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா தம் கணவர் கல்வி பயின்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தார். ஆக்ஸ்போர்ட் யூனியனின் தமது கணவரின் படம் மாட்டப்பட்டிருப்பதை ரசித்த அவர், தம் புதல்வன் அனுராவிடம் அது பற்றி ஏதோ கூறினர். தமது கணவரும், திரு. அந்தோனி ஈடனும் தங்கியிருந்த அறைகளையும் அவர் கண்டார். இரண்டாவது முறையாக தாம் ஆக்ஸ்போர்ட்டுக்கு விஜயம் செய்வதாயும் பிரதமர் தெரிவித்தார்.

### ராமராவ் மரணம்பற்றிய தகவல்கள்

புதுடில்லி, திங்கள்

முன்னாள் ராஜ்யசபை உறுப்பினரும் 'நாஷனல்' ஹெரால்ட்' ஆசிரியருமான திரு. ராமராவ் மரணம்பற்றி விவரங்கள் ராஜ்யசபையிலும், லோக்சபையிலும் வெளியிடப்பட்டது. அவர் மரணம்பற்றி மேலும் தகவல்கள் அறிவதற்காக கிழக்கு ரயில்வே பொலிசார் தீவிரமாகப் புலன் விசாரணை செய்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

### இந்திய துருப்புகள் காங்கோவுக்கு புறப்பட்டன

புதுடில்லி, செவ்வாய்

காங்கோ செல்லும் இந்திய போர்த் துருப்புகள் ஆபிரிக்கரின் மனதைப் புண்படுத்தும்படி நடக்கக் கூடாதென இன்று விமானம் ஏறிய இந்திய வீரர்களிடையே பேசிய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் அறிவுறுத்தினர்.

இந்தியத் துருப்புகளின் முதலாவது அணியைச் சேர்ந்த 200 வீரர்கள் 5 ஐக்கியநாட்டு விமானங்களில் புதுடில்லியிலிருந்துலியப்போல்ட்வில்லிக்குப் புறப்பட்டனர். திரு. மேனன் ஒவ்வொரு வீரரிடமும் கைகுலுக்கினர்.

'சமாதானப் பணிபுரியச்செல்லும் நீங்கள் கடமை, கண்ணியம், திறமை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாய் விளங்க வேண்டும். ஆபிரிக்க மக்களின் உணர்ச்சி புண்படும்படி நடக்கக்கூடாது. இந்தியத் துருப்புகள் எவ்வளவு காலம் அங்கு இருக்கவேண்டியிருக்கும் என்பது தேவையைப் பொறுத்து உள்ளது. ஒருவேளை நீண்டகாலம் இருக்கவேண்டி ஏற்பட்டால்மாற்றுத் துருப்புகள் அனுப்பிவைக்கப்படும்' என்றும் மேனன் அவர்களிடையே கூறினர்.

### செய்தித்திரட்டு

கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த அம்பாறைக்கு ஒரு புதிய கச்சேரியை ஆரம்பிக்க உள்நாட்டு மந்திரி ஏற்பாடுசெய்து வருகிறார்,

ஃ ஃ ஃ

ரஷ்யாவில் இலங்கை ஸ்தானீகராக இருக்கும் டாக்டர் மலலசேகரா, 1962 மார்ச்சிலிருந்து, ஐ நா. சபைக்கு இலங்கை பிரதிநிதியாக இருப்பார்.

ஃ ஃ ஃ

ஐ. நா. வில் இலங்கையின் விசேஷ பிரதிநிதியாகவுள்ள திரு.டி.பி. சுபசிங்க, ரஷ்யாவில் இலங்கை ஸ்தானீகராக நியமிக்கப்படுவார்.

ஃ ஃ ஃ

ஐ. நா. வில் இலங்கை பிரதிநிதியாகவுள்ள சேர் கிளாட் கொரியா, ஓய்வு பெற்றுக் கொள்வார்.

ஃ ஃ ஃ

அனுராதபுரத்துக்கு புதிய விமானசேவையை போஸன் தினத்திலிருந்து ஆரம்பிக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. 10 லட்ச ரூபாய் செலவில், விமான நிலையம் முதலியவை அமைக்கப்படுகின்றன.

ஃ ஃ ஃ

சீனத்திலிருந்து புத்தரின் புனித தந்தம் கொண்டுவர, கலாசார உதவி மந்திரி ஆரியதாஸா, சீனத்துக்குச்செல்கிறார். ஜூன் மாதம் 5ந் திகதி இங்கு புனித தந்தம் வருமென்றும் பல நகரங்களிலும் அதை தரிசிக்க ஒழுங்குசெய்யப்படுமென்றும் தெரிகிறது.

ஃ ஃ ஃ

கொழும்பிலே 10 மந்திரிகளுக்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவில் புதிய வீடுகள்கட்ட [illegible]சிக்கப்பட்டுள்ள[illegible]

### வர்த்தகபுள்ளி விபரமதிப்பீடு

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் வர்த்தகப் புள்ளி விபரமதிப்பீடு ஒன்று அடுத்த மாதம் ஆரம்பமாகும். தனியார் வர்த்தகத் துறையில் ஏற்றுமதி, இறக்குமதி, மூலதனம், இதரவிபரங்கள் ஆகியன அப்போது சேமிக்கப்படுமென்றும், இது சம்பந்தமான அறிக்கை வருட முடிவிற்கு முன் வெளியிடப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

### மோகன்கோஷ்டி தெரிவு

"கிழக்கிலங்கை கைப்பந்தாட்ட சங்கத்தினரால் நடத்தப்பட்ட கைப்பந்தாட்டப் போட்டியில் கல்லடி உப்போடை, 'மோகன்' கைப்பந்தாட்டக்கோஷ்டி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்கோஷ்டியினர் இம்மாதம் கொழும்பில், அகில இலங்கை கைப்பந்தாட்ட சம்மேளனத்தினரால் நடத்தப்படும் போட்டியில் பங்கு கொள்வர்.

## இன ஒதுக்கல் கொள்கை சரியானதுதானும்

### தென்னாபிரிக்க பிரதமர் பதில்

லண்டன், மார்ச் 14

காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாடு, நேற்று தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் பற்றியும், மே 31ம் திகதி குடியரசானபின் அது சாம்ராஜ்யத்தில் இருக்கலாமா என்பது பற்றியும் 5 மணி நேரத்திற்கு மேல் விவாதம் நடத்தி ஒரு முடிவும் செய்யாமல், இன்று காலை விசேஷ கூட்டம் ஒன்றில் விவாதத்தைத் தொடர்ந்து நடத்துவதெனத் தீர்மானித்தது.

விவாதத்தை இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு துவக்கிவைத்துப் பேசினர்.

தென்னாபிரிக்காப் பிரதமர் டாக்டர் வேர்வூட் பேசுகையில், தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை சரியானதுதான் என விவாதித்ததாகத் தெரிகிறது. இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா உட்பட எல்லாப் பிரதமர்களுமே தென்னாபிரிக்கக் கொள்கையைக் கண்டித்தும் மறுத்தும் பேசினர். மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் மிகவும் காரசாரமாகவும், கடுமையாகவும் தாக்கிப் பேசினர்.

தென்னாபிரிக்காவை காமன்வெல்த்தில் அனுமதித்தால் கானா காமன்வெல்த்தைவிட்டு விலகிவிடக்கூடுமென்ற அறிகுறி காணப்படுவதாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலன், காமென்வெல்த் உறவு மந்திரியைச் சந்தித்து தென்னாபிரிக்கா பற்றிப் பேசினர்.

இதற்கிடையில் மகாநாடு, சைப்ரஸை காமென்வெல்த்தில் ஒரு அங்கத்தினராக அங்கீகரித்ததுடன், அதன் தலைவர் ஆர்ச்பிடிப் மாக்காரியோவை பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்தது. ஸியராலியோனின் அங்கத்துவ விண்ணப்பம் இன்று பரிசீலிக்கப்படும்.

மகாநாடு வெள்ளிக்கிழமை முடிவடையுமெனத் தெரிகிறது.

### காஞவின் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 14

பாதுகாப்புச் சபையில் நடைபெறவிருக்கும் அங்கோலா பற்றிய விவாதத்தில், கானாவும் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்குமாறு தலைவர் அடலாய் ஸ்டீவன்ஸனைக் கானா ஜனாதிபதி டாக்டர் நிகரூமா கோரியிருக்கிறார்.

### அங்கோலாவில் 800 பேர் கைது

லண்டன், மார்ச் 13

அங்கோலாவில் ஏற்பட்ட கலகத்திற்குப் பின் 800 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாயும், அவர்களில் 200 பேர் வெள்ளையர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## இன்று கிளிநொச்சி

### தொண்டர்கள் சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி எம். பி. திரு சிவசுந்தரம் தலைமையில் கிளிநொச்சியிலிருந்து 2000 தொண்டர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள வருவார்கள். "ட்ருக்டர்" ஊர்வலம் ஒன்று நடத்தவும் தொண்டர்கள் எண்ணியுள்ளார்கள். அத்துடன் அங்கிருந்து வரும் தொண்டர் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒவ்வொரு கொத்து அரிசி வீதம் கொண்டுவந்து சத்தியாக்கிரகிகளுக்குக் கொடுப்பார்கள் என அறியப்படுகிறது.

**சனிக்கிழமை ஊர்வலம்**

புங்குடுதீவு கிராமச்சங்கத் தலைவர் தலைமையில், வரும் சனிக்கிழமை சுமார் 2000 தொண்டர்கள் பண்ணை தாம் போதி வழியாக ஊர்வலமாக வந்து யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வார்கள். இத் தொண்டர்கள் திரு. எஸ். ஜே. வி. யிடம்ஒரு பணமுடிப்பைக் கொடுப்பதுடன் இங்குள்ளவர்களுக்கு அரிசியும் வழங்குவார்கள் எனத் தெரிகிறது.

கொக்குவில் கோண்டாவில் கி. ச. தலைவரும் தமிழ் காங்கிரஸ் பிரமுகருமான திரு. சி. அருளம்பலம் தலைமையில் வரும் சனிக்கிழமை கிராமச் சங்கக் கி. கட்டிடத்திலிருந்து ஊர்லல்மாக வந்து சத்தியாக்கிரகம் செய்வார்கள். ஆண், பெண்கள் மாணவர்களுமாக 1000க் கணக்கில் தொண்டர்களைச் சேர்ப்பதில் முனைந்துள்ளனர்.

### சிங்கள சுருக்கெழுத்து பயிற்சி

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க சேவையில் சிங்களச் சுருக்கெழுத்தில் பயிற்சியில்லாத ஆங்கில சுருக்கெழுத்தாளருக்கு பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படுமென்றும், இவ்விதப் பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு விடுமுறை வழங்கும்படி இலாகா அதிகாரிகள் கேட்கப்பட்டிருக்கிறார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

### முள்ளிப்பற்று கிராமச் சங்கம்

முள்ளிப்பற்றுக் கிராமச்சங்கத்தில் நடந்த விசேஷ கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நடக்கும் தமிழ்மொழிப் போராட்டத்தில் சத்தியாக்கிரகிகளும் அரசாங்க ஊழியரும் போலிசாரின் மிருகத்தனமான தாக்குதலுக்கு உள்ளானதை யிட்டு கண்டனம் தெரிவிப்பதுடன் உடனடியாக ஓர் பாரபட்சமற்ற கமிஷன் மூலம் விசாரணை நடத்துமாறு பிரதம மந்திரி, நீதிமந்திரி, பொலிஸ் அதிபர் ஆகியோரை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இப்புத்தக வருவாயில் அரைவாசி தமிழுரிமைக்கு உதவப்படும்.

**தமிழ் இலக்கியம்**

( G. C. E. பரீக்ஷைக்குரியது )

**கம்பராமாயணம் — சுந்தரகாண்டம்**
**காட்சிப்படலம் — நிந்தனைப்படலம்**

பலராலும் உரையாசிரியர் என நன்கு மதிக்கப்பெற்ற
**ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்**
எழுதிய
கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, இலக்கணக்குறிப்பு என்னும் பகுதிகள் அமைந்த விரிவான உரையும்
பாரதி பாடல்கள் தொகுப்பு, விளக்கமும், குறிப்பும், பயிற்சி வினாக்களும்

**31 - 3 - 61-ல் வெளிவரும்.**

வெளியிடுபவர்:
மாணவர் தமிழ் வாசகங்களினதும்
ஸ்ரீ லங்கா ஆங்கிலப்பாட புத்தகங்களினதும் ஆசிரியர்
**வே. கணபதிப்பிள்ளை**
காரைநகர்.

கிடைக்குமிடம்:
சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
Ratna Stores, Malay Street, Colombo-2

Advt. 57

## வரி விளம்பரம்


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. இவை பற்றிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்,

Advt. 58

### தேவை

ஸ்ரீ கணேஸ் இன்டஸ்ரீஸில் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. 15 வயது முதல் 20 வயது வரை வேலை விபரம் சாந்துப் பொட்டு, பற்பொடி, பவுடர்பாக்கெற்ஸ் இவை போன்ற வேலைகள் செய்தல். விபரங்கட்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்:

**ஸ்ரீ கணேஸ் இன்டஸ்ரீஸ்,**
துன்னலை வடக்கு,
கரவெட்டி.

Advt 59


## "அஹிம்சையே நமது ஆயுதம்"

### மன்னரில் டாக்டர் நாகநாதன்

மன்னர், செவ்வாய்

"அஹிம்சா தர்மத்தை நிலைநாட்டியவர் மகாத்மா காந்தி. அவரின் பின்னல் எத்தனையோ கோடி மக்கள் திரண்டு நின்றார்கள். அவர்களுக்கு அவர் போதித்தது 'அஹிம்சையே நமது ஆயுதம் அதன்படியே நாம் ஒழுகுவோம்'என்பதுவே. அதையே நாமும் கடைப்பிடித்து நடக்கவேண்டும்"

இவ்வாறு மன்னரில் தொண்டர் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் டாக்டர் நாகநாதன் கூறினர்.

அவர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு திருக்கோணமலை ஆகிய இடங்களில் நடைபெறும் சாத்வீக சத்தியாக்கிரகத்தைக் குறிப்பிட்டு அவ்வாறு அவர்களையும் நடக்கும்படி கேட்டுக் கொண்டார்.

# மட்டக்களப்பில் மழையிலும், பனியிலும் மனம் தளரா சத்தியாக்கிரகிகள்

## இரவு பகலாக மறியல் செய்கின்றனர்

மட்டக்களப்பு, ஞாயிறு

சத்தியாக்கிரகிகளுக்கு வேண்டிய குடிதண்ணீர், மின்சார, சுகாதார வசதிகளை பட்டினசபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் செய்து கொடுத்திருப்பதுடன் தாமே நேரில் சகல வசதிகளும் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்று பார்வையிட்டுவருகிறார்.

தினமும் மறியல் செய்ய வருவோரின் தொகை அதிகரிப்பதால் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் காப்பாற்றத்தொகுதி வாரியாகச் சத்தியாக்கிரகத்தை நடத்துவது பற்றி ஆலோசனை நடைபெற்றுவருகிறது. உணவு, சுகாதாரம் போன்றவற்றை கவனிக்கத் தனித்தனி உபசபைகளை அமைக்கவும் முயற்சி நடைபெறுகிறது.

சத்தியாக்கிரகிகள் இரவு பகலாக மழை, பனி, வெயில் என்பவற்வைச் சகித்துக் கொண்டு இருந்துவருகிறார்கள். பெரிய புல்லுமலையிலிருந்து வந்த சத்தியாக்கிரகிகளில் சிங்கள மக்களும் காணப்பட்டனர்.

மோட்டார் மூலம் தமிழரசுக் கட்சிக் காரியதரிசி திரு. வி. நவரத்தினமும், திரு. எஸ். தருமலிங்கம் எம். பி. யும் இங்கு வந்துசேர்ந்து கட்சியின் இயக்கத்தின் நிலையைப் பரிசீலனை செய்துதிரும்பினர். அத்துடன் தலைவர்களுடன் அடுத்தநடவடிக்கைபற்றி விவாதித்தார்கள். சத்தியாக்கிரகிகளைப் பார்வையிட்ட திரு. நவரத்தினம் 'யாழ்ப்பாணத்தில் போதிய நிழலிருக்கிறது. மட்டக்களப்பில் சத்தியாக்கிரகிகள் வெயிலில் புழுங்குகிறார்கள்' என்று குறிப்பிட்டார்.

அரை மணிக்கொரு ஊர்வலம் வந்து சேர்ந்தவண்ணமிருக்கிறது. வெயிலின் கொடுமையைத் தாங்கமுடியாது மயங்குவோருக்கும் முதலுதவித் தொண்டர்கள் உதவிபுரிகின்றனர்.

## ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்

வல்வெட்டித்துறை, புதன்

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம் இலங்கை அரசாங்கத்திற்குக் கடனுக எண்பதினயிரம் ரூபாவைக் கொடுத்துள்ளது. 2,90,535 ரூபா 67 சதத்தை இருப்பாகவும் 963 அங்கத்தவர்களையும் கொண்ட இச்சங்கம் கடந்த வருடத்தில் இளைப்பாறிய ஆறு அங்கத்தவருக்கும், இறந்த ஐந்து அங்கத்தவர்களுக்கும் சகாயப் பணமாக 23,115 ரூபா 50 சதத்தை வழங்கியுள்ளது.

---

## "இராணுவத்தை வாபஸ் பெறுக"

### ஸ்தலஸ்தாபன கூட்டத்தில் தீர்மானம்

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன் துறைப் பட்டின சங்க மண்டபத்தில் வடமாகாண ஸ்தலஸ்தாபனங்களின் தலைவர்கள் சமாஜக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"சத்தியாக்கிரக இயக்கம் வலுப்பெறும் சமயத்தில் அரசாங்கம் போதிய திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கத் தவறும் பட்சத்தில் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படல் வேண்டுமென்று இயக்கத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறோம்"

சத்தியாக்கிரகச் செய்திகளை இலங்கை வானெலி இருட்டடிப்புச் செய்வதும், அதே சமயத்தில் கல்வி மந்திரியினதும், கொழும்பு மத்திய தொகுதி அங்கத்தவரதும் அறிக்கைகளை ஒலிபரப்புவதும் விரும்பத்தக்கதல்ல. எனவே இதுசம்பந்தமாக ஒலிபரப்பு மந்திரியைக் கண்டிக்கிறோம்."

சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட சிங்களச் சகோதரர்களுக்குப் பாராட்டுத்தெரிவிப்பதோடு மேலும் அவர்கள் ஆதரவைத் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்"

கூட்டுறவு சமாஜங்கள் இச்சமயத்தில் உணவு விநியோகம் செய்யும்பொழுது ஸ்தாபனங்களின் அங்கத்தவர்கள் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இராணுவத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம்."

# சத்தியாக்கிரக செய்திகள்

## வவனியா சர்வ கட்சிக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"தமிழ் சமூகம் என்றென்றும் அடிமையாக வாழ்ந்ததில்லை. இனிவாழப்போவதுமில்லை. தமிழர் தமது இழந்த உரிமைகளைப்பெறுவதற்கு கட்சிப்பற்றற்ற முறையில் ஒன்று சேர்ந்து சாத்வீகப்போராட்டத்தில் ஈடுபடவேண்டும்."

இவ்வாறு சென்ற ஞாயிற்றுக்கிழமை வவனியாவில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு. குலசேகரம் கூறினர்.

கூட்டத்தில் வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம், வவனியாப் பட்டின சங்கத்தலைவர் திரு. சுப்பிரமணியம் வவனியா பகுதி இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் திரு. கோ. நடேசபிள்ளை ஆகியோரும்பங்கு பற்றினர்.

⁂ ⁂ ⁂

40 மாணவர்கள் வரை பயின்றுவரும் தொழில் நுட்பக்கல்லூரி இராணுவ முகாமாக மாற்றப்பட்டதால் வகுப்புகள் தொடர்ந்து நடைபெற முடியாமலிருக்கின்றது.

இம்மாத இறுதியில் மாணவர்களின் பரீட்சை நடைபெற இருப்பதால் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுக் காரியாலயத்தைத் தவிர கல்லூரியின் ஏனைய இடமெல்லாம் இராணுவத்தினர் விடுதியாக மாறியுள்ளது.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் அந்த இடத்தையும் ராணுவத்தினருக்குக் கொடுக்கும்படி, கல்லூரி அதிபரிடம் கேட்டுள்ளாராம். கல்லூரி அதிபர் தமது கடிதத்தில் கல்லூரி நிர்வாகம், பரீட்சைக்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருப்பதால் அவ்விதம் செய்வது அசௌகரியமாக இருக்குமென அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு நிலைமையை கல்லூரி அதிபர் விளக்கி எழுதியும் பதில் ஒன்றும் இன்னும் கிடைக்கவில்லை.

இக்கல்லூரியை நிறுவுவதற்காக நியூசிலாந்து அரசாங்கம் 7 இலட்சம் ரூபாய் கொடுத்து உதவியதுடன் அங்கிருக்கும் இயந்திர சாதனங்களையும் அந்த அரசாங்கமே உதவியுள்ளது. இலங்கை அரசாங்கம் ஆசிரியர்களின் சம்பளத்தை மட்டுமே கொடுத்து வருகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

⁂ ⁂ ⁂

தமிழ் உரிமைகோரி நடைபெற்றுவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு உதவும் பொருட்டு வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் ஒருநாள் சம்பளத்தை — நூறுரூபாவை கடந்த சனிக்கிழமை இலங்கைத் தமிழரசுக்கட்சியிடம் வழங்கியுள்ளனர்.

⁂ ⁂ ⁂

தொண்டமானுறு திருச்செல்வச்சந்நதி ஆலயத்தில், தற்பொழுது நடைபெறும் தமிழர் உரிமைப் போராட்டம் வெற்றிபெறவும், இலங்கை வாழ் இரு இனமக்களும் நல்லுறவுடன் வாழவும் வேண்டி விசேஷ ஆராதனையும் கூட்டுப் பிரார்த்தனையும்நடைபெற்றது.

⁂ ⁂ ⁂

இம்மாதம் 3-ந்திகதி திங்கள் முதல் மாணவர் பகிஷ்கப்பினுல் மூடப்பட்டிருந்த வல்வெட்டித்துறைப் பாடசாலைகள் இன்று வழக்கம் போல் நடைபெறுகின்றன.

⁂ ⁂ ⁂

"மொழி உரிமைப் போராட்டம் முடியும் வரை சரவணை சனசமூக நிலையத்தில் கறுப்புக் கொடி பறக்கவிடவேண்டும்" என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற சரவணை சன சமூக நிலையக்கூட்டத்தில் நிறைவேறியது.

⁂ ⁂ ⁂

ஊரெழு பொதுமக்கள் சார்பில் ரூபா 313-85 கொண்ட பணமுடிப்பொன்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் சேர்க்கப்பட்டது.


**மில்க்கோஸ்**

**குழந்தைகளை திடகாத்திரமாக வளர்க்கிறது**

உங்கள் குழந்தையின் தேகாரோக்கியமே அதிமுக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டமுடியாது போனுல் அவனின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு உகந்த போஷாக்களிக்கும் சிசு-உணவை அவனுக்கு ஊட்டுவதற்கு நிச்சயப்படுத்துங்கள்.

டாக்டர்கள், மில்க்கோஸ்தான் குழந்தைகளுக்கு இன்றிமையாத சிசு உணவு என்று கூறுவார்கள். மில்க்கோஸில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரிநீரகைகள், கொழுப்புச் சத்துகள். சேர்க்கப்பட்டிருக்கின்றன. மில்க்கோஸில் தேகவளரச்சியையும் நல்ல தேகாரோக்கியத்தையும் தரும் மேலதிக விட்டமின் சத்துகளும், இரும்பு சத்துகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

முழு ஆடை நிரம்பிய பசுப்பாலிலிருந்து விஞ்ஞான ரீதிப்படி தயாரிக்கப்படும் இந்த மில்க்கோஸ் இலங்கையின் சீதோஷ்ண நிலைமைக்கேற்றவாறு விசேஷமாகப் பொதியப்பட்டு—உங்களுக்கு சுத்தமாகவும் பத்திரமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் கொடுக்க ஆரம்பியுங்கள்.






**மில்க்கோஸ்**

இன்றியமையாத சிசு-உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால் தயாரிக்கப்படுகிறது.

HLM 3487

# ‘நெல்லுக்குக் கூடிய விலை கொடுக்கவேண்டாம்

## வேண்டிய நெல்கிடைக்கிறது’

—கிளிநொச்சி எம். பி.

கிளிநொச்சி, செவ்வாய்

திரு. சிவசுந்தரம் எம். பி. விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறுவதாவது:—

“யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கும் மக்களுக்கு அரசாங்கம் பங்கீட்டரிசி வழங்காதபடியால், அவர்களுக்குதவுமுகமாக பரந்தன், கிளிநொச்சிக் கமக்காரர்கள் பல்வேறு கூட்டுறவுச் சமாஜங்களுக்கு நெல் புசல் ஒன்றுக்கு 10 ரூபாய் விதம் விற்றுவருகிறார்கள். வவுனியாப் பகுதி கமக்காரர்கள் தங்கள் நெல்லை இன்னும் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். ஆகையால் யாழ்ப்பாணத்தில் எந்தக் கிராமத்திலும் நெல் புசல் ஒன்றுக்கு ரூ. 10.50க்கு மேற்படாமல் விற்க முடியும். பொது மக்கள் சங்கக் கடைகளில் வேண்டிய நெல் வாங்கலாம் என்பதையும், கூடிய விலை கொடுத்து வாங்கத் தேவையில்லை என்பதையும் அறிவித்துக்கொள்கிறேன்.

## உழைப்போருக்கு ஒற்றுமை அவசியம்

கொடிகாமம், திங்கள்

‘கிராமச்சங்கத் தேர்தலில் போட்டியிடும்போது ஏற்படும் மனக்கசப்புகளை அங்கத்தவரான பின்னர் மறந்து நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். தமிழ் மொழிக்காகப் போராடும் இன்றைய நிலையில், கட்சிப் பாகுபாடுகளை மறந்து மொழி உரிமைபெற நாம் எல்லோரும் பாடுபடவேண்டும்.” இவ்வாறு மிருசுவில் கிராமச்சங்க முதலாவது கூட்டத்தில் சக்கத்தலைவர் திரு. ஏ. டீ. பொன்னுத்துரை கூறினார். தமிழ் உரிமைப் போராட்டத்தில் பங்குபற்றிய தொண்டர்களை ராணுவம் தாக்கியதற்காக அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்றும் நிறைவேறியது.

## கல்லோயாவில் புதிய கச்சேரி

கொழும்பு, திங்கள்

அம்பாறையைச் சேர்ந்த கல்லோயாப் பள்ளத்தாக்கில் புதிய கச்சேரி ஒன்றை அமைப்பதென உள்நாட்டு அமைச்சு தீர்மானித்திருக்கிறது. இக்கச்சேரி அக்டோபர் மாதம் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டது. உகணை என்ற இடத்தில் கச்சேரிக்கான கட்டடங்களையும், உத்தியோகத்தர் வாசஸ்தலங்களையும் மந்திரி ஸி. பி. டி, சில்வா கொடுத்துதவுவார். இப்போது குறித்த பிரதேசம் மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் நிர்வாகத்திலிருக்கிறது.

## பலியிடுவது பாதகச்செயல்

சுழிபுரம், செவ்வாய்

“பாதகச்செயலாகிய பலியிடுவதை விட்டு சைவசமய நன்னெறிகளைக் கடைப்பிடித்து சைவர்களாக நாம் வாழவேண்டும்.” இவ்வாறு சமீபத்தில் சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் மிருகபலியீட்டை நிறுத்துமுகமாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் சைவ சித்தாந்தசபைத் தலைவர் திரு நா. சேனாதிராசா கூறினார்.

சுழிபுரம் கிராமச் சங்கத் தலைவர் திரு சு. கந்தசுவாமி ஜே. பி. பேசுகையில் பலியிடுவதை நிறுத்துவதே தர்மமாகும் என்றார். திருவாளர்கள் சு. சண்முகரத்தினசர்மா, த. மயில்வாகனம், மு. நாகலிங்கம், ஆ. மார்க்கண்டு ஆகியோரும் பேசினர்.

## சுருட்டுத் தொழிலாளர் 17ம் திகதி ஊர்வலம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இராணுவத்தை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து வாபஸ் பெறவேண்டுமென்றும் உணவுப்பொருட்களை யூனியன்கள் முன்னர் பெற்று விநியோகித்ததுபோலவே இப்பொழுதும் செய்ய அனுமதிக்கப்படவேண்டுமென்றும் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதற்காக இன்று புதன்கிழமை சுருட்டுத் தொழிலாளர் நடத்தவிருந்த ஊர்வலத்தை பின்போட்டிருக்கின்றனர். சுருட்டு உற்பத்தியாளர்கள் 17ம் திகதி ஊர்வலம் நடத்தவிருப்பதால் அன்றைய தினமே தங்கள் ஊர்வலத்தையும் நடத்துவதென்று சுருட்டுத் தொழிலாளர் முடிவு செய்துள்ளனர். சுருட்டு உற்பத்தியாளர் சங்கத்துக்கும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## சிக்கிங்கில் சீன சிப்பாய் கைது

### லோக்சபையில் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, செவ்வாய்

திபேத்துக்கு அருகிலுள்ள சிக்கிங் பிரதேசத்தில் குப்பக் என்ற இடத்தில் ஆயுதம் தரித்த சீன சிப்பாய் ஒருவர் பாரத துருப்புக்களால் கைது செய்யப்பட்டிருப்பதாக இன்று லோக்சபையில் பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன் அறிவித்தார்.

குப்பக் பிரதேசத்தில் துப்பாக்கி சூடுசப்தம் கேட்டு இந்திய ரோந்து படையினர் அங்கு சென்றதாகவும் அங்கு ஆயுதம் தரித்த சீனர் ஒருவர் இருப்பதைக்கண்டு அவரை வளைத்துக் கொண்டதாகவும், திரு. கிருஷ்ணமேனன் கூறினார்.

சீன சிப்பாய் பாரத ரோந்து படையை நோக்கிச்சுட முயன்றதாகவும் ஆனால் அவரை ரோந்துப்படையினர் வளைத்துப் பிடித்துக்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டது. சீன சிப்பாயிடமிருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக பாதுகாப்பு மந்திரி கூறினார்.

## ஆதரவளிக்க ஆசிரியர்சங்கத்துக்கு கோரிக்கை

மாவிட்டபுரம், செவ்வாய்

வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கத்தின் கூட்டம் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

“இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் தமிழ் உரிமைப் போராட்டம் கட்சி, மத சம்பந்தமற்றது. இப்போராட்டத்திற்கு வடமாகாண ஆசிரியர் சங்கம் தனது பெருமாதரவைக் காட்டவேண்டும்” என்ற தீர்மானம் கூட்டத்தில் நிறைவேறியது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து உடனடியாக ராணுவத்தை வாபஸ்பெறும்படி அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

## பிரதமருக்கு வழக்கறிஞர் தந்தி

யாழ்ப்பாணம், புதன்

தற்காலிக மந்திரி சபைத் தலைவருக்கு வழக்கறிஞர் திரு. ஏ. ஆர். ஆசீர்வாதம் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பியுள்ள தந்தியின் சுருக்கம் வருமாறு:-

“பத்திரிகைக்கு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் திரு. என். கியூ. டயஸ் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பங்கீட்டரிசி கொடுப்பதில் சிரமம் இருப்பதாக அறிவித்துள்ளார். ஒரு சாதாரண மூன்றாந்தர குமாஸ்தா இந்த வேலையைச் செய்வாராகையால் சேவையைத் திருப்திகரமாகச் செய்ய திரு. டயஸுக்குப் பதிலாக குறிப்பிட்ட குமாஸ்தாவை நியமிப்பது நல்லது.”

## இரண்டு நிமிட மௌனம்

யாழ்ப்பாணம், புதன்

இராணுவத்தை யாழ்ப்பாணத்திலிருந்து வாபஸ்பெற வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அத்திப்புலம் கலைமகள் சனசமூக நிலையத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஞாயிறுக்கிழமை கலட்டிச் சந்தியில் நிகழ்ந்த மோட்டார் விபத்தில் உயிர் துறந்தவருக்கு இரண்டுநிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

## சிறிமா—தயாள் சந்திப்பு

லண்டன், மார்ச் 14

காங்கோவிலுள்ள ஐ. நா. உச்சி அதிகாரி திரு இராஜேஸ்வர தயாள் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகாவைச் சந்திக்க விருக்கிறார்.

## சாவகச்சேரி தொண்டர்களின் மூன்றும் தினம்

சாவகச்சேரி, செவ்வாய்

சத்தியாக்கிரக போராட்டத்தில் சாவகச்சேரி தொண்டர்கள் அடுத்த வெள்ளிக்கிழமை மூன்றும்முறையாக கலந்துகொள்வர். அன்றைய தினம் சுமார் பதினையாயிரம் பேர் இயக்கத்தில் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நிதி திரட்டப்படுகிறது

ஊர்காவற்றுறை, செவ்வாய்

தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமைப் போராட்டத்திற்கு நிதிஉதவுவதற்கு வேலணை தீவு மக்களிடம் நிதிசேர்க்கப்பட்டுவருகிறது. தமிழ் அபிமானிகள் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சட்டவிரோத குடியேற்றம்

# அரசாங்கத்தின் புதிய நடவடிக்கைகள்

கொழும்பு, செவ்வாய்

சட்டவிரோதக் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரநடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதன்படி 1000 வீரர்களைக் கொண்ட இராணுவக் கோஷ்டியொன்றையும், 500 பேரைக் கொண்ட பொலிஸ்படையொன்றையும் பயன்படுத்த ஏற்பாடாகியுள்ளது. கடற்படையைச் சேர்ந்த விமானங்களும், விமானப்படையைச் சேர்ந்த விமானங்களும் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கு பயன்படுத்தப்படும். சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காக அரசாங்கம் எடுக்கவிருக்கும் இப்புதிய நடவடிக்கைகளின் காரணமாக அரசாங்கத்துக்கு ரூ. 4,741,000 செலவாகும் என்று கருதப்படுகிறது.

வடக்கே பருத்தித்துறையிலிருந்து தெற்கே புத்தளம் வரையுள்ள கடல்பிரதேசத்தில் காவல்புரிவதற்கும், சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கும் குறித்த துருப்புகள் பயன்படுத்தப்படும்.

யாழ்ப்பாணக் குடாநாடு, வடக்கிலுள்ள தீவுகள், பொம்பரிப்புக்கும் புத்தளத்துக்கும் இடையிலிருக்கும் பகுதிகள் ஆகியபிரதேசங்களில் கடற்படையினரும், போலிசாரும் காவல்புரிவார்கள்.

கல்பிட்டியபகுதி பொம்பரிப்பு பகுதிகளில் இராணுவம் காவல் புரியும் என்று தெரிகிறது.

## சங்கீத கதாப்பிரசங்கம்

வண்ணை சிவன் கோவிலில் நடைபெறும் உற்சவத்தைத் தழுவி, முத்தமிழ்மணி, திரு. மணிபாகவதர், சென்ற இரண்டு நாட்களில் முறையே “தெய்வநீதி”, “பொல்லாப்பிள்ளையார்” எனும் பொருள்பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார். இன்று மாலை 6 மணிக்கு “ஔவையார்” கதை.

## “தடுப்புக்காவலில் தாக்கப்பட்டார்”

### சட்டவிரோதமாக வந்த இந்தியர்

ஊர்காவற்றுறை, செவ்வாய்

சட்டவிரோதமாகக் குடியேறியதாகச் சந்தேகித்து ஊர்காவற்றுறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட இந்தியர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் கடுமையாகத் தாக்கப்பட்டாரென்றும் இவர் இப்பொழுது ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசாங்கத்தினருக்கும் இந்திய அரசாங்கத்தினருக்கும் ஊர்காவற்றுறை ஜனசமூக நிலையத்தினர் புகார் செய்துள்ளனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் தாக்கப்பட்டது சம்பந்தமாக பொலிசார் விசாரணை செய்துவருவதுடன் இது சம்பந்தமாக பொலிஸ்காரர் ஒருவர் உடனடியாக இடமாற்றமும் செய்யப்பட்டுள்ளார்.

## வானவெளி பிரயாணம்

### குருஷேவின் நம்பிக்கை

மாஸ்கோ செவ்வாய்

வானவெளியில் மனிதன் வெகு விரைவில் கப்பல்களில் பிரயாணம் செய்யக்கூடிய நிலைமை உருவாகிவிடும் என்று ரஷ்யப் பிரதம மந்திரி திரு. குருஷேவ் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். விவசாயிகள்கள் கூட்டமொன்றில் பேசுகையில் திரு. குருஷேவ் கூறினார்.

## 6 கோடி ரூபாய் செலவு

புதுடில்லி, செவ்வாய்

பிரிட்டிஷ மகாராணி இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்த பொழுது, அதற்காக, இந்தியா 6 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது.

‘ஹென்றி’
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்றி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை கரத்தை வண்டிகள் ஊர்வலமாக சத்தியாக்கிரகம் நடைபெறும் கச்சேரிக்குச் சென்ற காட்சி.

## அனிச்சங்குளம் வழக்கு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்தார்.

1958 ம் ஆண்டு மேமாதம் 29 ம் திகதி சட்டவிரோதமாகக் கூடியதாகவும் அனிச்சங்குளத்தில் எம். எச். வில்லியம் சிங்கோ என்பவருடைய கடைக்குத் தீவைத்ததாகவும் குற்றம்சாட்டி செல்லையா வைரமுத்து, இராசையா இரத்தினசிங்கம், இராசையா கார்த்திகேசு, ஆறுமுகம் மதியாபரணம், எம். எம். இப்ராகிம், பொன்னையா பரமநாதன், பொன்னையா நடராஜா, வி. துரையப்பா, எஸ். செல்லத்துரை ஆகியோர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

தமிழ்ப்பேசும் ஜூரிகள் முன்னிலையில் தங்களை விசாரணை செய்யவேண்டுமென முதலில் கோரியிருந்த எதிரிகள் ஆங்கிலம் பேசும் ஜூரிகள் முன்னிலையில் விசாரிக்க வேண்டுமெனப் பின்னர் கேட்டுக்கொண்டனர்.

இரண்டுநாள் விசாரணையின் பின்னர், சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லாததால் வழக்கைத் தொடர்ந்து விசாரிக்க விரும்பவில்லையென்று ஜூரிமார் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

நீதியரசர் என். சின்னத்தம்பி வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்தார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசா வழக்கு விசாரணையை நடத்தினர்.

1, 2, 3, 4, 5, 8-ம் எதிரிகளின் சார்பில் திரு. ஆர். டி. சிவகுரு, திரு. என். ஆர். விஜயநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எச். டி. தம்பையாவுடன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. தோன்றினர். திரு. ஆர். டி. சிவகுரு, திரு. என். ஆர். விஜயநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எச். டி. தம்பையா 6-ம், 7-ம் எதிரிகளின் சார்பில் ஆஜரானர்.

## மொழிச் சட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மும் செய்யப்படாதென்றும், தனிச்சிங்கள சட்டத்தில் ஓர் அட்சரமும் மாற்றக்கூடாது என்றும் கேட்டதுடன், தாங்கள் அவசியமானல் யாழ்ப்பாண கச்சேரிக்குச் சென்று வேலைசெய்வதாகவும் தெரிவித்தனர்.

## உடப்பு தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புறத்தில்) ஏழாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி என்னும் முதியவரும் அமைதியாக உட்கார்ந்து மறியல் செய்தார். இவருக்கு வயது 103. அதிக தூரம் நடக்க முடியவில்லை என்று கூறிய இந்த முதியவர் சத்தியாக்கிரகம் செய்யக் காரில் வந்ததாகத் தெரிவித்தார்.

நேற்றுச் சத்தியாக்கிரகிகள் பலர் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

கச்சேரியின் முன்புற வாசல்களில் பெண் தொண்டர்களே இப்பொழுது மறியல் செய்கிறார்கள்.

### உள்ளேயும் ஒரு தடை

கச்சேரி வாசல்களிலும் வீதிகளிலும் இப்பொழுது இராணுவக் காவலில்லை. கச்சேரியின் 'ஓல்ட்பார்க்' வாசலில் ஆயுதந் தரித்த பொலிஸ்காரர் காவல் புரிகின்றனர். 'ஓல்ட்பார்க்' வாசலையடுத்து நிறுவப்பட்டுள்ள 'கூடாரத்திலும் அதற்கருகிலுள்ள இராணுவ லொறிகளிலுமே இராணுவத்தினர் காணப்பட்டனர்.

'ஓல்ட்பார்க்'வாசலுக்கு உள்பக்கம் சில அடி தூரத்தில் மற்றொரு தடுப்புக் கடவை போடப்பட்டுள்ளது.

---

திரு. வி. பி. டி' சில்வா, தாம் பண்டாரநாயக்காவின் கொள்கையையே பின்பற்றப் போவதாக உறுதி கூறினர்.

திரு. கே. எம். பி. ராஜரத்ன' அந்த சிங்கள குமாஸ்தாக்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார்.

## அரிசிப் பங்கீட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்கு எச்சரித்துள்ளார். திரு. தர்மரத்தினம் நேற்று விடுத்துள்ள ஒரு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்கு அரிசி, மாவு, சீனி போன்ற உணவுப் பொருட்களை அரசாங்கம் விநியோகிக்காவிட்டால் விநியோகிக்க வைக்கு முகமாக தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன்."

அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"இவ்வித அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் நடைபெருததினல் தொழிலாளர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிருர்கள் என்பதை நான் சொல்லத்தேவையில்லை. பட்டினியுடன் தொழிலாளர்கள் வேலை செய்வார்களென எவரும் எதிர்பார்க்கவேண்டாம். அத்தியாவசியப் பொருள்களின் மொத்த இறக்குமதியாளர் என்றவகையில், அவைகளை விநியோகிப்பது அரசாங்கததின் தனிப்பெரும் பொறுப்பாகும்.

இவ்விஷயத்தில் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி யோசிக்க "சகல தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

---

புதுடில்லி, செவ்வாய்

குஜ்ராத் ராஜ்யத்தில் புதிதாகத் தோண்டப்பட்ட ஒரு கிணற்றில் எண்ணெய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.


**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

**பார்த்துப் பயன் அடைய வேண்டிய பண்பு நிறைந்த படம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணு (திருக்கோணமலை) விஜிதா (மஸ்கேலியா) மொடர்ன் (பதுளை)

நடிகர்கள்:
என். டி. ராமராவ்
வி. நாகையா
டி. எஸ். பாலையா
பி. எஸ். வீரப்பா
டி. ஆர். ராமச்சந்திரன்
ஓ. ஏ. கே. தேவர்
ராஜநலா



நடிகைகள்:
சௌகார் ஜானகி
பி. கண்ணாம்பா
கிரிஜா
மோகனு
குசலகுமாரி
விஜயலட்சுமி
எஸ். வரலட்சுமி

டைரக்ஷன்: கே. காமேஸ்வரராவ்

# ராஜ சேவை

சங்கீதம்: டி. வி. ராஜா

பின்னணி: திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி. லீலா, எஸ். ஜானகி.

**மனோகரா** (யாழ்ப்பாணம்)

# முதலாளி

மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு

ராஜேந்திரன் - தேவிகா ராஜம் நடித்தது.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.